எளிதாக அணுகக்கூடியவராக இருப்பார். தாசில்தார்கள் போன்றவர்களிடம் இதை விட்டால் இழுத்து அடிக்கக் கூடிய நிலைமை வரும், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற காரணத்தால் இப்படி ஆணையிட்டிருக்கிறோம்.

கல்லாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 881— திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் அரும்பாவூரிலிருந்து கிருஷ்ணாபுரம் வழியே செல்லும் நெடுஞ்சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். வி. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய மதிப்பு எவ்வளவு, எப்போது இது கட்ட துவங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, மேற்கண்ட இந்த பாலமானது 1979—80 ஆம் ஆண்டு பாகம் இரண்டு திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார். இந்த பாலம் 6 லட்ச ரூபாய் தோராய மதிப்பிலே செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் இரண்டாம் பாகத் திட்டத்திலே மேற்கொள்வதற்கான வேலைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை

*வினா எண் 882— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள லக்கி நாயக்கன் பட்டி அருகில் உள்ள முஸ்குந்தா நதியின் குறுக்கே அணைக்கட்ட அல்லது (Percolation Tank) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தென் ஆர்க்காடு மாவட்டம், முஸ்குந்தா நதியின் குறுக்கே ஓர் குளம் அமைக்கும் திட்டத்தை ''நடுத்தரப் பாசன திட்டத்தின்'' கீழ் எடுத்துக் கொள்ள விரிவான ஆய்வு தேவைப் படுகிறது. இத்திட்டத்தை ஆய்வு செய்யும்படி மேற்பார்வைப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், திருச்சி, பணிக்கப் பட்டுள்ளார். ஆய்வு எப்பொழுது முடிவுறும் என்பதனை தற்போது கூற இயலாது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களே கல்நாட்டு விழா நடத்துவதாக இருந்தது. அதற்குள்ளே ஆட்சி மாறிவிட்டது. ஆனால் இன்னும் அதுபற்றி ஆய்விலே இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எத்தனை ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது ? எப்பொழுதுதான் நிறைவேற்றுவார்கள் ? உண்டா இல்லையா என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா அல்லது ஆய்விலேயே இருந்து கொண்டிருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் முதல்வர் அடிக்கல் நாட்டுவதாக இருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இதேபோன்று பல திட்டங்களுக்கு அவர்கள் நாட்டுவதாகச் சொல்லியும், அடிக்கல் நாட்டியும் இருக்கிறார்கள். ஆனால் அணைகள் கட்டப்பட வில்லை. இப்படி மக்களுக்குத் தவறான வாக்குறுதிகளைப் பல பேர் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் இந்த அரசுக்குத் தெரியும். ஆனாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் வாக் குறுதிகள் கொடுத்தால் அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நாங்களெல்லாம் திட்டங்களைத் தீட்டு கிறோம். அதன்படி செயலாற்றி வருகிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவொரு நடுத்தரப் பாசனத் திட்டம் என்ற அளவில் 35 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும் சமீபத்தில் மத்திய அரசின் மூலம் சிறுபாசனத் திட்டங்களுக்கு அடிப்படையில் புதிய 'டெஃபனிஷன்' கொடுத்திருக்கிறார்கள். முதலில் 25 இலட்சம், அதற்குக்கீழ் இருக்கும் திட்டங்களுக்கு சிறுபாசனத் திட்டம் என்று பெயர் இருந்தது. ஆனால் இன்று 5,000 ஏக்கர்களுக்கும் குறைவாகப் பாசன வசதி அடைகின்ற திட்டங் களுக்கெல்லாம் சிறு பாசனத் திட்டங்கள் என்ற புதிய வகுப்பை, புதிய முறையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அதன் விளைவாகக் கூடச் சிறுபாசனத் திட்டங்களின் கீழ்தான் வர முடியும். இதன்மூலம் ஏறக்குறைய 300 ஏக்கர்களுக்குப் பாசன வசதிகள் பெறும். முஸ்குந்தா நதியின் குறுக்கே ஏற்கனவே பத்து அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த

1979 ஏப்ரல் 30]

அணை மூலமாக இன்னும் மீண்டும் எவ்வளவு தூரம் பாசன வசதியை அதிகரிக்க முடியும் என்பதை ஆய்வு செய்யத் தான் திட்ட ஆய்வுக் கோட்டம் மேற்பார்வைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டு, இன்று அவர்கள் பரிசீலனை செய்து கொண் டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 883 மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகிறது.

கன்னிமாரா பொது நூலகம், சென்னை

*வினா எண் 877—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தில் கிரேடு—I பிபிளி யோகிராபர் பதவிகள் காலியிருந்தும் அதை நிரப்பாததற்கு காரணம் ஏதும் உண்டா ?

(ஆ) அதை நிரப்ப அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ): 1976–1977 நிதி ஆண்டு முதல் வெளிநாட்டு ஆங்கில நூல்களை வாங்க கன்னிமாரா பொது நூலகத்திற்கு வருடா வருடம் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. அவ்வாறு வாங்கும் நூல்களை தரம் பிரித்து கைவசமுள்ள நூல்களுடன் சேர்க்க பிபிலியோகிராபர் உதவியாளர்—முதல் நிலை பதவி தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டு, (ஒவ்வொரு வருடமும், நூல்கள் வாங்க அரசின் நிதி ஒதுக்கீடு கிடைத்ததும்) இப்பதவியையும் தொடர அரசு ஆணைப் பெற்று, இப் பதவியும் வருடா வருடம் தொடரப்பட்டு வருகிறது. இதன்படி 1978–1979-ம் நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. ஒரு இலட்சம், அரசு ஆணை எண். 1253, கல்வி, நாள் 7.7.78-ல் அனுமதிக்கப் பட்டதும், இப் பதவியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு 29.10.78-ல் நிரப்பட்டன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த கிரேடு 1 பிபிலியோகிராபர் போஸ்டுக்கு ஏற்கனவே 'அட்ஹாக் ரூல்ஸ்' என்று, ஜி.ஓ. எம்.எஸ். 1133, 21.6.78—ஆம் தேதி வெளியிட் டிருக்கிறார்கள். ஒரு கிராஜுவேட்டாக இருக்க வேண்டும், டிப்ளாமா அல்லது டிகிரி லைபரரி சயன்ஸில் பெற்றிருக்க வேண்டும், தாய்மொழி தமிழாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு டைரக்டர் தன் சொந்தக்காரருக்குப் பதவி உயர்வு தர வேண்டுமென்பதற்காக, ஆவுடையப்பன் என்பவருக்குத் தர வேண்டும் என்பதற்காக, தவறாக இந்த அட்ஹாக் ரூலுக்கு விரோதமாக அப்பாயிண்ட் செய்து விட்டும், மேலும்....